

செலாயாங் மார்க்கெட்டில்

# கோலாலம்பூர் மாநகர் மன்றம்

# அதிரடிச் சோதனை



கோலாலம்பூர், மார்ச் 20-

கோலாலம்பூர் பாசார் போரோங் அருகே உள்ள ஜாலான் 2/3ஏ பூசாட் பண்டார் உத்தாராவில் அந்நிய நாட்டவர்கள் நடத்தி வந்த கடைகளில் கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் அவர்கள் வியாபாரம் செய்வதற்குப் பயன்படுத்தி வந்த 11 கருவிகள் உட்பட பல பொருட்களைப் பறிமுதல் செய்தனர்.

இச்சோதனை நடவடிக்கையில் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினர் உட்பட பத்து நாடாளுமன்றத் தொகுதி அலுவலகமும் துணை நின்றதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் வெளியிட்ட ஓர் அறிக்கை கூறியது. 1974ஆம் ஆண்டு கால்வாய்ச் சாலை, கட்டடச் சட்டத்தின் 46 (1) (டி), 2016ஆம் ஆண்டு சிறு வியாபார லைசென்ஸ் சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ் இச்சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அந்த அறிக்கை கூறியது.

இந்நடவடிக்கையின்போது உணவுகள், காய்கறிகள், பழங்கள், கரும்பு, வியாபாரம் செய்வதற்குப் பயன்படுத்தப் பட்ட குடை ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டதாகக் கூறிய அந்த அறிக்கை, அவை அனைத்தும் பின்னர் செராஸ், தாமான் மிகர்ஜாவில் உள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டன.